**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை

**<u>இடைநிலை மனு எண். 202/2025-ல்</u>**

**<u>அசல் வழக்கு எண். 96/2016</u>**

1. மணிமேகலை
2. ராஜசுலோச்சனா (இறந்தார்)
3. விஜயலெட்சுமி
4. அஞ்சப்பன்
5. கண்ணகி
6. செல்வநாயகம்
7. ஆறுமுகம்
8. சத்தியா
9. சித்ரா
10. சரிதா .... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிர்//**

1. ராஜேஸ்வரன்
2. நாகேஸ்வரன்
3. மல்லிகா
4. சார்பதிவாளர், மன்னார்குடி.
5. மாவட்ட ஆட்சியர், திருவாரூர். .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

இம்மனுவில் கண்டுள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவின் சுருக்கம்</u>** :-

இம்மனுவின் 4 ம் மனுதாரர் அசல் வழக்கில் 4 ம் வாதி ஆவார். அசல் வழக்கு விளம்புகை தொடர்புடைய உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரரை P.W.1 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு.ராதா, அவர்களை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டி சாட்சி பட்டியல் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி சாட்சி பட்டியலில் கண்டுள்ள சாட்சி மனுதாரர் தரப்பிற்கு மிகவும் முக்கியமான சாட்சிகள் ஆவார். அவரை சாட்சியாக விசாரித்து மனுதாரர்கள் தரப்பை நிரூபிக்க வேண்டியுள்ளது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. ஆகவே மேற்படி மனுவில் கொடுத்துள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக் கொள்ளும்படி உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3) **<u>2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :- (அதனை 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தனதாகவும் ஏற்றுக்கொள்கிறார்கள்</u>)**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கும், உண்மை

நிலவரப்படிக்கும் நிலை நிற்க கூடியதல்ல. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டியவர்கள். அதனை இந்த எதிர்மனுதாரர்கள் வன்மையாக மறுக்கிறார்கள்.

மேற்படி அசல் வழக்கானது மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக போடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக பல வாய்தாக்கள் போடப்பட்டு சாட்சி பட்டியல் தாக்கல் செய்யாமல் அலட்சிய போக்குடன் இருந்துவிட்டு தற்போது காலம் தாழ்த்தி சாட்சி பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அசல் வழக்கில் கடந்த 2018ம் ஆண்டு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அதன் பிறகு தாவா ஸ்தலத்தை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் அவர்கள் கடந்த 08.07.2022ம் தேதியில் நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்து தற்பொழுது நீதிமன்ற ஆணையரை அவரது தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொண்டு விசாரிப்பதற்கு மனுதாரர்கள் அளித்துள்ள மனுவானது எவ்விதத்திலும் நிலைநிற்க கூடியதல்ல.

மேற்படி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவானது எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தையும் வீண் மன உளைச்சலையும் கொடுக்க வேண்டும், ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படி ஏற்புடையதல்ல. ஆகவே மனுதாரர்கள் தாக்கல் செய்யப்பட்டுளள இம்மனுவானது எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையை தாக்கல் செய்துள்ளார்கள்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) <u>**தீர்வு**</u> :-

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலணை செய்கையில், அசல் வழக்கு விளம்புகை மற்றும் அதன் தொடர்புடைய உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர் வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பில் வாதியை P.W.1 ஆக விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பில் சாட்சியை விசாரிக்க வேண்டி வாய்தா போடப்பட்ட நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வருகிறது.

**4.** மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதற்காக அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சிகளை விசாரிக்கும்படி மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு.ராதா அவர்களை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டி கோரியுள்ளார்கள். மேற்படி கூடுதல் சாட்சி பட்டியலில் கண்டுள்ள சாட்சிகள் மனுதாரர்கள் தரப்பிற்கு மிகவும் முக்கியமான சாட்சிகள் ஆவார்கள். அவர்களிடம் அனுமதி பெற்று கூடுதல் சாட்சி பட்டியல் தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்கள் மனுவில் கண்டுள்ள நபர்களை மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்து வழக்கை மேல் நடத்த வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது.

**5.** மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் கடந்த 2018 ம் ஆண்டு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா ஸ்தலத்தை பார்வையிட்டு கடந்த 08.07.2022 ம் தேதியில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் தாவாவிற்கு மிகவும் அவசியம் என்பதால் அவரை சாட்சியாக ஏற்றுக்கொண்டு விசாரிப்பதற்கு நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள சாட்சிப் பட்டியல் சட்டப்படி ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.** மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சிகளை விசாரிப்பதற்கும், குறுக்கு விசாரணை செய்வதற்கும், எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்புள்ளது. மேற்படி எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள போதிலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. மனுதாரர்கள் சொல்லியுள்ள காரணங்கள் அனைத்தும் ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6) முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (30.06.2025) அவையறியப் பகரப்பட்டடது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.30 17:42:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.30 17:42:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண். 202/2025-ல்**

**அசல் வழக்கு எண். 96/2016**

1. திருமதி.மணிமேகலை, வயது 62, க/பெ.பாலையன், இந்து, வசிப்பிடம், கோட்டைக்காடு கிராமம், இளங்காடு அஞ்சல், பட்டுக்கோட்டை முன்சிபி மற்றும் தாலுக்கா.
2. திருமதி.ராஜசுலோச்சனா, வயது 60, க/பெ.ஆறுமுகம், இந்து, வசிப்பிடம், உம்பளச்சேரி அஞ்சல் மற்றும் கிராமம், திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா. (இறந்தார்)
3. திருமதி.விஜயலெட்சுமி, வயது 58, க/பெ.வீரைய்யன், இந்து, வசிப்பிடம், சிந்தாமணிகாடு கிராமம், வாய்மேடு, திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா.
4. திரு.அஞ்சப்பன், வயது 56, த/பெ.சோமு, இந்து, வசிப்பிடம், நெ.1/140, அழகி தெரு, பாளையங்கோட்டை கிராமம், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.
5. திருமதி.கண்ணகி, வயது 50, க/பெ.தியாகராஜன், இந்து, வசிப்பிடம், வீரன்வயல், ஜாம்புவானோடை, முத்துப்பேட்டை பேரூராட்சி, திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா.
6. திரு.செல்வநாயகம், வயது 48, த/பெ.சோமு, இந்து, வசிப்பிடம், நெ.1/141, அழகி தெரு, பாளையங்கோட்டை கிராமம், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.
7. திரு.ஆறுமுகம், வயது 70, இந்து, வசிப்பிடம், உம்பளச்சேரி அஞ்சல் மற்றும் கிராமம், திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா.
8. சத்தியா, வயது 33, த/பெ.ஆறுமுகம், இந்து, வசிப்பிடம், உம்பளச்சேரி அஞ்சல் மற்றும் கிராமம், திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா.
9. சித்ரா, வயது 30, த/பெ.ஆறுமுகம், இந்து, வசிப்பிடம், உம்பளச்சேரி அஞ்சல் மற்றும் கிராமம், திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா.
10. சரிதா, வயது 27, த/பெ.ஆறுமுகம், இந்து, வசிப்பிடம், உம்பளச்சேரி அஞ்சல் மற்றும் கிராமம், திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா.

.... மனுதாரர்கள்/ வாதிகள்

// எதிர்//

1. திரு.ராஜேஸ்வரன், வயது 58, த/பெ.வடிவேல், இந்து, வசிப்பிடம், நெ.1/141, அழகி தெரு, பாளையக்கோட்டை கிராமம், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.

2. திரு.நாகேஸ்வரன், வயது 46, த/பெ.வடிவேல், இந்து, வசிப்பிடம், நெ.1/141, அழகி தெரு, பாளையக்கோட்டை கிராமம், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.
3. திருமதி.மல்லிகா, வயது 56, க/பெ.லேட்.செல்வராஜ், இந்து, வசிப்பிடம், பாலரங்காடு, பாளையக்கோட்டை கிராமம், மன்னார்கடி முன்சிபி மற்றும் தாலுக்கா.
4. சார்பதிவாளர் அவர்கள், சார்பதிவாளர் அலுவலகம், காந்தி ரோடு, மன்னார்குடி முன்சிபி மற்றும் டவுன்.
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விளமல், திருவாரூர் முன்சிபி மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவில் கண்டுள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 24.03.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 25.03.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.30 17:42:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.